MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on 28.03.2018 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 226 | **பொருள் எண்.1**<br><br>இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் உள்ள கடைகளை அகற்றி விட்டு புதிய கட்டிடங்கள் கட்டுவது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு எண்.23806/2017ன்படி தொடரப்பட்டுள்ள வழக்கினை எடுத்து நடத்த நகர்மன்ற வழக்கறிஞர் திரு.எம்.முருகன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.7500 ஐ வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.3257/2017/இ1) | அனுமதிக்கப்பட்டது |
| 227 | **பொருள் எண்.2**<br><br>இந்நகராட்சியில் 2017–2018ம் ஆண்டிற்கு நகர்ப்பறு சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.00கோடியில் சாலை பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.ஐ.இளையராஜா என்பவர் தொடரப்பட்ட வழக்கு W.P.(MD)No.2904/2018 க்கான வழக்கு கட்டணம் ரூ.7500/–ஐ வழக்கறிஞர் திரு.எம்.முருகன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.907/2017/இ1 | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 228 | **பொருள் எண்.3**<br><br>மேலூர் நகராட்சியில் அலுவலக உபயோகத்திற்கு தேவையான தினமலர், தினதந்தி, தினகரன், மாலைமுரசு ஆகிய நாளிதழ்கள் 2017–2018க்கு வாங்குவதற்கான செலவினம் ரூ.25000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 229 | **பொருள் எண்.4**<br><br>மேலூர் நகராட்சி அலுவலகப் பணிகளுக்காக கீழ்க்கண்ட செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டதற்கு செலவான தொகை ரூ.2100 யை வழங்க ஆணையரின் அனுமதிக்கு.<br>அ) அம்மா இருசக்கர வாகனத்திட்டம் 2017–18ன் கீழ் வரப்பெற்ற விண்ணப்பங்கள் 385 ஐ கணினியில் உள்ளீடு செய்த வகையில்லை பணியாளர்களுக்கு நாள் ஒன்று ரூ.200/– வீதம் 7 நாட்களுக்கு ரூ.1400 யை செலவு செய்ததை திரு.எம்.ரத்தினகுமார் மேலாளர் அவர்களுக்கு வழங்க மன்றப் பொருள் வரைவு ஒப்புதலுக்கு<br>ஆ) மேலூர் நகராட்சி 2016–ம் ஆண்டு அனைத்து பிரிவு வருகைப்பதிவேடு மற்றும் சுருக்கம் கலர் ஜெராக்ஸ் எடுத்தது (லஞ்ச ஒழிப்புத்துறைக்கு வழங்க) தொகை ரூ.700/– செலவு செய்யப்பட்டதை திருமதி.ம.திலகவதி இளநிலை உதவியாளருக்கு வழங்க மன்றப்பொருள் வரைவு ஒப்புதலுக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.2554/2017/சி1 | அனுமதிக்கப்பட்டது |
| 230 | **பொருள் எண்.5**<br><br>மேலூர் குற்றவியல் நீதிமன்றத்தில் கோர்ட் வளாகத்தை சுத்தம் செய்வது தொடர்பாக ஓ.எஸ்.எண்.2/2018 மற்றும் ஐ.ஏ.எண்.9/2018 என்ற எண்ணில் வழக்கு தொடரப்பட்டதற்கு, நகராட்சி சார்பாக ஆஜராக வழக்கறிஞர் திரு.வி.சுப்பிரமணியன்–க்கு வழக்கு கட்டணம் ரூ.8500/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 231 | **பொருள் எண்.6**<br><br>சென்னையில் 06.03.2018ல் நடைபெற இருக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வுகூட்டத்திற்கு இந்நகராட்சியில்லை நடைபெற்ற திட்டப்பணிகள் மற்றும் நடைபெறவுள்ள பணிகள் குறித்தான புதிய திட்ட பிரேரணைகள் வண்ணபுகைப்படங்கள்/திட்ட அறிக்கைகள் தயார் செய்த வகைக்கு ரூ.6820/– செலவு தொகையை திரு.பா.பட்டுராஜன் குடிநீர் பணிமேற்பார்வையாளருக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 232 | **பொருள் எண்.7**<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுளில் உள்ள தெருவிளக்குகளை ஆண்டு பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள ரூ.29.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப்பொறியாளர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. தெருவிளக்குகளின் விபரம் கீழ்க்கண்டவாறு. | அனுமதிக்கப்பட்டது |

| Sl. no | Description | Total No. of Lights |
|---|---|---|
| 1 | 40 W Tube light | 356 |
| 2 | 1 X 24 W CFL | 959 |
| 3 | 2x36w Energy Saver Light | 60 |
| 4 | 4 X 24W CFL Lamp | 50 |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>5</td><td>250w SV Lamp</td><td>72</td></tr>
<tr><td>6</td><td>150w SV Lamp</td><td>27</td></tr>
<tr><td>7</td><td>250w MV Lamp</td><td>57</td></tr>
<tr><td>8</td><td>High mast Light</td><td>64</td></tr>
<tr><td>9</td><td>1x36w Energy Saver Light</td><td>61</td></tr>
<tr><td></td><td>Total per year</td><td>1706</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>
அ) இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை தனியார் மூலம் ஆண்டு பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணி மேற்கொள்ள ரூ.29.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ஆ) இந்நகராட்சிக்கு மின்சிக்கன விளக்குகள் பொருத்தும் திட்டம் செயல்பாட்டிற்கு வரும்வரை மேற்படி பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைபொறியாளர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(கோப்பு எண்.2666/2018/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>233</td>
<td>
பொருள் எண்.8<br><br>
திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்க்கண்ட நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகத்தினை தனியார் மூலம் பராமரிப்பு மேற்கொள்ள 28.02.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>
1) அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி<br>
2) அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி<br>
3) நகராட்சி உயர்நிலைப்பள்ளி , அழகர்கோவில் ரோடு<br>
4) நகராட்சி துவக்கப்பள்ளி, கருத்தபுளியம்பட்டி<br>
5) நகராட்சி துவக்கப்பள்ளி, சிவன்கோவில் தெரு
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனம்</th><th>தொகை/ஆண்டிற்கு</th></tr>
<tr><td>1.</td><td>Corelive Foundation,<br>111, Singaravelar theru, K.Pudur. Madurai</td><td>11,36,242</td></tr>
<tr><td>2.</td><td>Quality Service Society,<br>12C,Thiruvapudakovil., Madurai</td><td>11,36,182</td></tr>
<tr><td>3.</td><td>Integrated Service Centre,<br>1, Balanagammal kovil street, Madurai</td><td>11,36,252</td></tr>
</table>
அவை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Quality Service Society,Madurai மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
(கோப்பு எண்.2020/2017/எச்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>234</td>
<td>
பொருள் எண்.9<br>
இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளுக்காக 40 பணியாளர்களை தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த முறையில் நியமித்துக் கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கருத்துருவின் மீது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் KDis No. 6094/பி3/2018 நாள்.14.03.2018ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே 40 பணியாளர்களை தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த முறையில் நியமித்துக் கொள்வதற்கான செலவினம் ஆண்டிற்கு ரூ.63.00இலட்சத்திற்கும், ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்தல் உள்ளிட்ட பட்டியலின்படியான செலவினத்திற்கும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(கோப்பு எண்.3123/2017/எச்1)
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 235 | **பொருள் எண்.10**<br><br>திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், டம்பர் பிளேசர் பின்களை பழுதுநீக்கம் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக A3078 திருப்பரங்குன்றம் அக்ரோ இன்ஜினியரிங் & சர்வீஸ் கோ–ஆப்ரேடிவ் சென்டர் லிமிடெட்லிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. அரசு அங்கீகாரம் பெற்ற A3078 அக்ரோ இன்ஜினியரிங் திருப்பரங்குன்றம் மூலம் பணிமேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான A3078 திருப்பரங்குன்றம் அக்ரோ இன்ஜினியரிங் மூலம் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.3229/2017/எச்1 | அனுமதிக்கப்பட்டது |
| 236 | **பொருள் எண்.11**<br><br>மனிதக்கழிவுகளை மனிதனே அகற்றக்கூடிய பணியில் உள்ள பணியாளர்களை கணக்கெடுப்பு செய்வதற்கான முகாம் 13.04.2018 மற்றும் 16.04.2018 ஆகிய இருதினங்களில் நடத்திட மாவட்ட ஆட்சியர் ,மதுரை அவர்களின் 22.03.2018 கூட்டத்தில் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. முகாம் விபரங்களை பத்திரிக்கைச் செய்தி, பிட் நோட்டீஸ், ஆட்டோ விளம்பரம், பேனர், தொலைக்காட்ச ஆகியவற்றின் வாயிலாக விளம்பரம் செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட விளம்பர நடவடிக்கைகளுக்காகவும், முகாம் நடத்திடவும் தோராய செலவினம் ரூ.50000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.613/2018/எச்1 | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 237 | **பொருள் எண்.12**<br><br>மேலூர் நகராட்சியில் பணிபுரியும் கீழ்க்கண்ட நபர்களுக்கு தலா ரூ.50000/– வீதம் வாகன முன்பணம் வழங்க ஆணையாளர் அனுமதிக்கு வேண்டப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br><br>1) அ. ஜெய்சங்கர் , துப்புரவு பணியாளர்<br>2) பி.சேவுகப்பெருமாள் , துப்புரவு பணியாளர்<br>3) ஆ.வீரையா, துப்புரவு பணியாளர்<br>4) க.கண்ணாத்தாள் , துப்புரவு பணியாளர்<br>5) என்.நாகராஜன், துப்புரவு பணியாளர்<br>6) வி.பாண்டி , துப்புரவு பணியாளர்<br>7) அ.வேல்பாண்டி , துப்புரவு பணியாளர்<br>8) கே.பழனிக்குமார் , ஓட்டுநர்<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 238 | **பொருள் எண்.13**<br><br>மேலூர் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்துநிலையத்தில்தட்டுகளில் தூக்கி பொரி கடலை முறுக்கு விற்பனை செய்யும் உரிமத்தினை 2018–2021ம் ஆண்டிற்கு 01.04.2018 முதல் 31.03.2021 முடிய உள்ள காலத்திற்கு அனுபவித்துக் கொள்ள பொதுஏல மற்றும் சிறப்புக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு 27.03.2018ம் தேதியன்று பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் குத்தகைதாரர் கலந்துகொண்டனர். | அனுமதிக்கப்பட்டது |

**பொதுஏலம்**

| வ. எண். | பெயர் / முகவரி | ஏலம்கோரியத் தொகை ( வருடம் 1க்கு ) |
|---|---|---|
| | **ஒருவரும் கலந்துகொள்ளவில்லை.** | |

**ஒப்பந்தப்புள்ளி**

| வ. எண். | பெயர் / முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ( வருடம் 1க்கு ) |
|---|---|---|
| 1.. | ஆர்.வீரமணி,<br>நாய்குடிபள்ளம்<br>நாகம்மாள்கோவில்தெரு<br>மேலூர் | ரூ.110000 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

திரு.ஆர்.வீரமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளிதொகை கடந்த ஆண்டுத்தொகை ரூ.127229/–ஐக் காட்டிலும் ரூ.17229 குறைவாகவும், மூன்று ஆண்டு சராசரி தொகை ரூ.121266/–ஐக் காட்டிலும் ரூ.11266 குறைவாகவும் உள்ளது.

மேற்காணும் இனத்திற்கு மூன்றாவது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும் மேற்காணும் ஒற்றை ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

எனவே பேருந்துநிலையத்தில் தட்டுகளில் தூக்கி பொரி கடலை முறுக்கு விற்பனை செய்யும் உரிமத்தினை திரு. ஆர்.வீரமணி, குத்தகைதாரருக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைப்பு செய்ய மன்ற அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 2985/2017/அ2

| | | |
|---|---|---|
| 239 | **பொருள் எண்.14**<br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான 6 குத்தகை உரிம இனங்களை 2018–2021ம் ஆண்டிற்கு பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளி 13.03.2018 நாளன்று கோரியதற்கு விளம்பர கட்டணம் கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது. | அனுமதிக்கப்பட்டது |

| வ.எண். | நாளிதழ் பெயர் | பட்டியல் எண் | விளம்பரம் செய்யப்பட்ட நாள் | பட்டியல் தொகை |
|---|---|---|---|---|
| 1 | எக்ஸ்பிரஸ் பப்ளிகேசன், (தினமணி) | MDUTN30048111 | 23.02.2018 | 20362 |

மேற்கண்ட விளம்பர கட்டணத்தை சம்பந்தப்பட்ட நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்